**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 68/2025**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 04.03.2026.**

| | |
|---|---|
| **Name : சசிகலா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் காவல் உதவி ஆய்வாளர் மாதுராஜ் அவர்கள் ஓய்வு பெற்றதால் அவர் சார்பாக ஆவணத்தின் அடிப்படையில் சாட்சி அளிக்கிறனே். கடந்த 05.12.2024–ம் தேதி இரவு 8 மணிக்கு இவ்வழக்கில் காவல் உதவி ஆய்வாளர் மாதுராஜ் அவர்கள் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, சந்தோஷ் த/பெ சீனிவாசன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று புகார்மனுவின் தன்மைக்கு ஏற்ப ஜலகண்டாபுரம் காவல் நிலைய குற்றஎண்.188/2024 ச/பி 281, 106(1) BNS பிரிவில் வழக்கு பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.**

2) பிறகு காவல் உதவி ஆய்வாளர் மாதுராஜ் முதல்தகவல் அறிக்கை மற்றும் வழக்கு கோப்பை என் உத்தரவின் பேரில் கடந்த 06.12.2024–ம் தேதியன்று காலை 06.00 மணிக்கு சம்பவயிடம் ஜலகண்டாபுரம் டூ நங்கவள்ளி ரோடு சாலை செந்தில் தியேட்டர் அருகில் உள்ள நடேசன் பீடா கடை அருகில் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முருகன், மாரியப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர்தயார் செய்தார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகும்.**

3) பிறகு காவல் உதவி ஆய்வாளர் மாதுராஜ் அவர்கள் சாட்சிகள் சந்தோஷ், தங்கவேலு, முத்து, தனபால், பூதேஷ், சேவி, சக்திவேல், முருகன், மாரியப்பன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். முன்பாக இவ்வழக்கில் காயம்பட்ட கந்தசாமி என்பவர் சேலம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அவருக்கு முதலுதவி சிகிச்சை மருத்துவர் தமையந்திராணி அளிக்கப்பட்ட பின்னர் காயம்பட்ட கந்தசாமி என்பவர் 05.12.2024-ம் தேதி மதியம் 2.10 மணிக்கு, சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனவே சிகிச்சை அளிக்கப்பட்ட மருத்துவர் குமரேசன் மற்றும் தமைந்திராணி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதியப்பட்டது. **விபத்து பதிவேடு அ.த.சா.7 ஆகும், இறப்பு உறுதி அறிக்கை அ.தா.ச.8 ஆகும்.**

4) பின்னர் பிரேதத்தின் மீது காவல் உதவி ஆய்வாளர் மாதுராஜ் இறப்பின் உன்மை தன்மை அறியும் பொருட்டு பிரேத விசாரணை பஞ்சாயத்தார் முன்னிலையில் செய்யப்பட்டது. **பிரேத விசாரணை அறிக்கை அறிக்கை அ.சா.ஆ.9 ஆகும்.** இறப்பின் உண்மை தன்மை அறிய வேண்டி மருத்துவர் கோகுல்ராம் அவர்களிடம் தலைமை காவலர் சரவணன் என்பவர் மூலமாக பிரேதம் அடையாளம் காட்டப்பட்டு கடந்த 06.12.2024 -ம் மதியம் 1.20 மணிக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. **சடலகூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.10.** ஆகும். பிறகு நல்லடக்கம் செய்வதற்காக உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

5) வழக்கு கோப்பு கடந்த 07.12.2024-ம் தேதியன்று பெற்ற நான் விபத்தில் ஈடுபட்ட TN-93-F-9348 இருசக்கர வாகனம் கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திருமதி.மீனாகுமாரி வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளறு அறிக்கை அ.சா.ஆ.11 ஆகும்.** இவ்வழக்கில் நான் 07.12.2024-ம் தேதி நான் வழக்கு கோப்பை பெற்று சாட்சி சந்தோஷ் விசாரித்தேன். காவல் உதவி ஆய்வாளர் வசம் கூறியதை என்னிடம் கூறியதால் நான் வாக்கு மூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் சம்ப இடத்தில் சாட்சி நடேசனை என்பவரை விசாரணை செய்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் எதிரி வாகனத்தை பற்றி விசாரிக்க

எதரியான ரத்தினம் என்பவரும் விபத்தில் காயம் பட்டு தரண் மருத்துவமனைவில் சிகிச்சையில் இருந்தார். அவரிடமும் வாக்குமூலம்பெற்று இவர் வழக்கின எதிரியாக இருப்பதால் வாக்குமூலத்தை வழக்கு கோப்பை வைத்தேன்.

6) கடந்த 24.12.2024- ம் தேதி மாலை 5 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரி ரத்தினத்தை நிலையத்ததின் முன்பு வைத்து கைது செய்தும் பின்னர் கைது செய்யப்பட்டு தக்க நிலையப்பிணையில் விடுவித்தார். நான் 25.12.2024-ம் தேதி இவ்வாகனத்தை தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் விசாரித்து சான்று பெற்றும் வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் பிரேத பரிசேதனை செய்த மருத்துவர் கோகுல்ராம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனை அலுவலுக்கு சென்ற தலைமை காவலர் 862 சரவணன் என்பவரையும் முதல் விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் மாதுராஜ் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

7) இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்த பிறகு, குற்றத்தன்மை உண்மை என தெரியவந்ததால் வழக்கு தன்மைக்கேற்ப சாட்சிகளின் விசாரணைக்கேற்ப புலன் விசாரணையை முடிவு பெற்ற பிறகு எதிரியின் மீது கடந்த 25.12.2024-ம் தேதி குற்றஎண்.188/2024 ச/பி 281, 106(1) BNS ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல்செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

8)என்னுடைய விசாரணையின் படி இந்த வழக்கின் விபத்து எப்படி ஏற்பட்டது என்பதை தெரிந்து கொண்டேன் என்றால் இவ்வழக்கில் இறந்து போன கந்தசாமி என்ற நபர் நடேசன் பீடா கடைக்கு வருவதற்காக ரோட்டை இருபுறமும் பார்த்துவிட்டு ரோட்டின் கிழக்கில் இருந்து மேற்காக நடந்து ரோட்டின் ஓரமாக வந்தபோது ஜலகண்டாபுரம் அரசமரம் இருந்து நங்கவள்ளி ரோட்டில் சென்றபோது விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன்.

9)இந்த வழக்கின் ஆஜர் எதிரி சென்ற பாதை சரியான பாதை என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்தாக சொல்லப்படும் இடத்தில் சாலையை கடப்பதற்காக  என்ற அறிவிப்பு பலகையும் மற்றும் சாலை குறியீடு உள்ளதா என்றால் அந்த இடத்திற்கு சற்று தள்ளி  வேக தடை உள்ளது ஆனால் குறியீடு இல்லை. அ.சா.3 சேவி என்பவரை நான் விசாரித்தேனா என்றால் இல்லை. காவல் உதவி ஆய்வாளர் விசாரணையில் ரோட்டின் கிழக்கிலிருந்து மேற்காக கடந்தபோது தான் விபத்து நடந்ததாக கூறியுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

10)எனது விசாரணையின் படி இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யார் யார் என்றால் சேவி மற்றும் சக்திவேல் நடேசன், முருகன், மாரியப்பன் ஆகியோர்கள் ஆவார்.  அ.சா.4 சக்திவேல் என்பவர் சம்பவம் குறித்து தனக்கு நேரடியாக தெரியாது என்றும் சத்தம் கேட்டு தான் சென்று பார்த்தேன் என்று உதவி ஆய்வாளரின் விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் இல்லை.

11)அ.சா.3 சேவி என்பவர் விபத்தில் இறந்தவரின் மீது இருச்சக்கர் வாகனத்தில் எந்த பாகம் மோதியது தான் பார்க்கவில்லை என்றும், கீழே விழுந்த பின்பு தான் பார்த்ததாக உதவி ஆய்வாளரின் விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.5 நடேசந்த அ.சா.6 முருகன். அ.சா.7 மாரியப்பன், ஆகியோர்கள் நீதிமன்ற விசாரணையில் சம்பவம் குறித்து தங்களுக்கு நேரடியாக தெரியாது என்றும் தகவல் கேள்வி பட்டுதான் சம்பவம்இடம் வந்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது விசாரணையில் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாகதான் கூறியுள்ளார்கள்.

நான் சொன்னமாதிரி, சொன்ன  நேரத்தில் சொன்னவிதத்தில், சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.  சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் சம்பவயிடம் செல்லாமல் போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.  எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நிலைய உதவி ஆய்வாளர் சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதற்கு ஆதரவாக காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர் மாதிரி வரைப்படம் தயாரித்தும் சம்பவ இடச் சாட்சிகளை விசாரிக்காமல் தவறுதலாக தயாரித்து

வைத்து இருந்த வாக்குமூலத்தை சரிவர விசாரிக்காமல் அதற்கு ஆதரவாக இறுதி அறிக்கை செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரியின் அஜாக்கிரதையால் இந்த விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

ஒம்/— தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.